



# வேதாத்திரி மகரிசியின் தத்துவ தரிசனங்கள்

1. **வேதாத்திரியத்தின் சுத்தவெளித் தத்துவம்.**
2. **வேதாத்திரியத்தின்** காந்தத் தத்துவம்.
3. **வேதாத்திரியத்தின் விண் தத்துவம்**
4. **வேதாத்திரியத்தின் விரிவலைத் தத்துவம்**
5. **வேதாத்திரியத்தின் வான்காந்தத் தத்துவம்**.
6. **வேதாத்திரியத்தின்** பிரபஞ்சத் தன்மாற்றச் சரித்திரம்.
7. **வேதாத்திரியத்தின்** கடவுள் தத்துவம்
8. **வேதாத்திரியத்தின் வாழ்க்கைத் தத்துவம்**.
9. **வேதாத்திரியத்தின் கருமையம்.**
10. **வேதாத்திரியத்தில் உயிர்**
11. **வேதாத்திரியத்தில் மனம்**
12. **வேதாத்தரியத்தில் சித்தாந்தம் வேதாந்தம்**
13. **வேதாத்திரியத்தின் மறுபிறவி**
14. **வேதாத்திரியத்தின் சொர்க்கமும் நரகமும்.**
15. **வேதாத்திரியத்தின் புண்ணியம் பாவம்.**
16. **வேதாத்திரியத்தில் விதி மதி**
17. **வேதாத்திரியத்தின்** செயல்விளைவுத் தத்துவம்
18. **வேதாத்திரியத்தின்** ஆத்திகம் நாத்திகம்
19. **வேதாத்திரியத்தின் வேதாந்த தத்துவம்**
20. **வேதாத்திரியத்தின் சைவேடி தத்துவம்.**
21. **வேதாத்திரியத்தின் சைவ சித்தாந்த தத்துவம் தத்துவம்.**
22. **வேதாத்திரியத்தின் யோகத் தத்துவம்.**
23. **வேதாத்திரியத்தின் அறிவுத் தத்துவம்.**

## வேதாத்திரி மகரிசியின் தத்துவ தரிசனங்கள்

தத்துவவாதிகளுக்கும், சிந்தனையாளர்களுக்கும், ஆன்மீக குருமார்களுக்கும் -பஞ்சமில்லாத நாடு நமது பாரதம்.

தத்துவம் என்ற சொல்லுக்கு- உண்மை என்பது பொருள். தத்துவ விளக்கமும், அந்த விளக்கத்தின்படி வாழும் ஒழுக்கமும் இணைந்த உடல், உள்ளச் சிறப்பியக்கமே ஞானம் எனப்படும்.

இந்திய தேசத்தவராகிய அதிலும் கீழைச் சேசத்தவராகிய நமக்குத் தத்துவ ஞானம் பரம்பரைச் சொத்து.

இந்த பரம்பரை செல்வமாகிய- நமக்குரிய ஒரே சொத்தைப் பற்றி, அதனது இயல்புகளைப் பற்றி- ஓரளவாவது அறிந்து வைத்திருப்பது அவசியமாகும்.

இன்று -இந்தியா தனது தத்துவத்தை -அதன் மரபுகளிலிருந்து வளர்க்க வேண்டியுள்ளது.

இந்தியாவில் -வர்க்கப் போராட்டக்களம்- தொடர்ந்து நடைபெறும் போது, பொருள் முதல் வாதம் மற்றும் கருத்து முதல் வாதம் -இரண்டிற்கும் இடையேயான போராட்டமும்-- நடைபெறும்.

கருத்து முதல் வாதிகள் -வேதாந்தத்தை மறுவியாக்யானம் செய்வதன் மூலம்- திருப்தியடைவார்கள்.

பொருள் முதல் வாதிகள்- இந்திய இயக்க இயல் பொருள் முதல் வாதத்தை- வளர்ப்பார்கள்.

வர்க்கப் போராட்டத்தில் -வெற்றி பெற இது தேவை. இது குறித்து -ஜெர்மனியைச் சேர்ந்த இந்திய வரலாற்று மரபு ஆய்வாளர் -வால்டர் ரூபன்- 1962 ல் -தனது விருப்பத்தை வெளியிட்டார்.

- இந்தியர் - இந்தியரல்லாத தத்துவ வரலாற்றாசிரியர்கள் ஒத்துழைப்பை ஏற்படுத்தி- இந்திய மற்றும் இந்தியரல்லாத -பொதுவானதொரு தத்துவ வரலாற்றை- தோற்றுவிக்க விரைவிலே முன் வரவேண்டும்.

தத்துவ வரலாற்றை முறையாக தொகுக்க, அனைத்து தத்துவங்களையும் உள்வாங்கி- தேவையானதை எடுத்துக் கொண்டு,

ஒரு தத்துவ வரலாற்றுக்கு முன்னோடியாக வந்தவர்தான், தமிழகத்தில் தோன்றிய- விடிவெள்ளி தத்துவஞானி வேதாத்திரி மகரிசி.



இந்த மண்ணில் பிறந்த -மரபார்ந்த தத்துவஞானிகளில் ஒருவரல்ல, வேதாத்திரி மகரிசி.

இந்திய தத்துவ மரபில்- எந்தப் பிரிவுக்குள்ளும் -வகைப்படுத்தபட முடியாதவர்.

வேதாத்திரி மகரிசி, மடாதிபதியோ முனிவரோ அல்ல. 20-ஆம் நூற்றாண்டின்- முக்கியமான தத்துவ ஞானிகளில் ஒருவராக- உலகம் முழுவதும் அவர் மதிக்கப்படுகிறார்.

கவித்துமான சொற்களில்- தன் எண்ணங்களை -இயல்பாக வெளிப்படுத்தியவர்.

உண்மையைத் தேடும் யாத்திரையை- ஒவ்வொருவருககுள்ளும்- சாத்தியப்படுத்தும் வழிமுறை அவருடையது.

அவர் உயிரோடு இருந்த போது -சாமானிய மனிதர்களிலிருந்து- அறிவுஜீவிகள், அறிவியலாளர்கள் வரை -பலரும் அவரோடு தொடர்ந்து -உரையாடி வந்தார்.

முக்கியமான அறிவியலாளர்களும்- தத்துவச் சிந்தனை கொண்டோரும்- படைப்பாளிகளும்- அவரை மதிக்கிறார்கள்.

அவர் மறைந்த பின்பும்- அவரது உரையாடல்களின், உரைகளின் பதிவுகளை- ஆழ்ந்த அக்கறையோடு- கேட்கவும் படிக்கவும் படுகின்றன.

இந்திய தத்துவச் சிந்தனைகள்- ஆக்கப்பூர்வமானவை. வாழ்க்கையில் கொள்கின்ற உண்மைகளை ஒட்டியே -தத்துவமும்,

வாழ்க்கை நெறிகளும்- அமையப் பெற்றுள்ளன. எனவே- இது ஒரு வாழ்க்கை முறையாகும்.



பாரதத்தில் தத்துவங்கள் பல விளைந்தாலும்- தனக்கென்று தனி முத்திரைப் பதித்தவர்- இருபதாம் நூற்றாண்டு தந்த பாமரமக்களின் தத்துவஞானி வேதாத்திரி மகரிசி.

இவர்தம் தத்துவம்- தனிமனித வாழ்வை மையமாகக் கொண்டதாகும்.

வாழ்கின்ற காலங்களில்- மனிதன் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும் என்பதே -இவர்தம் -வாழ்வியல் பாடமாகும்.

"வாழ்க வையகம்" , "வாழ்க வளமுடன்" என்பன- மகரிசி கூறும் தத்துவ மகாவாக்கியங்களாகும்.

இவரின் தத்துவ சிந்தனைகள்- இந்திய தத்துவஞானம் என்ற வழித்தடத்தில்- பயணிக்கிறபோதும், இவரது பல சிந்தனைகள்- இந்தியத் தத்துவ ஞானத்திற்குப்- புதிய வரவாகவும், புத்தொளி ஊட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

இந்திய தத்துவங்களில்- தேவையற்றதை வடிகட்டி, மனிதனுக்குத் தேவைப்படும் தத்துவங்களை எளிமையாக்கி- பாமரனுக்கும் புரியும் வகையில் -அமைந்துள்ளன.

இவரது சில சிந்தனைகள்- இந்தியத் தத்துவ ஞானத்திற்குப் புரிய வரவாகவும், புத்தொளி ஊட்டுவனவாகவும் உள்ளன.

இவரது சில சிந்தனைகள்- இந்திய தத்துவ ஞான வரலாற்றில்- புரட்சிகரமானதாகவும் காணப்படுகின்றன.

கிழக்குத் தத்துவத்தையும்- மேற்குலக தத்துவத்தையும்- இணைத்து- மனவளக்கலையாக- மானுட தத்துவத்தை வழங்கியுள்ளார்.



பண்டைய மெய்ஞ்ஞானத்திற்கும்- இன்றைய விஞ்ஞானத்திற்கும்- இணைப்புப் பாலமாக விளங்குகிறார்.

இவரது தத்துவங்களில் -அறிவியல் நோக்கு மிளிர்கின்றது. அதனால் -இவர் மெய்ஞ்ஞானத்தற்குக் கொடுக்கும் சொல்- புதிதாகவும், பொருள் புதியதாகவும் காணப்படுகின்றது.

இவரது தத்துவங்களை "வேதாத்திரியம்" என்றழைக்கப்பட்டு, பல்கலைக்கழகங்கள் பல பட்டப் படிப்புகளை வழங்கி வருகின்றன.

தற்சமயம் 30 பல்கலைக்கழகங்களில் மனவளக்கலை பாடங்கள் கற்பிக்கப்படுகிறது.

வேதாத்திரி மகரிசி- தமது தத்துவச் சிந்தனைகளின் அடிப்படைகளாகச் சுத்தவெளி, விண், விரிவலை, வான்காந்தம் என்ற நான்கை குறிப்பிடுகின்றார். இவை நான்கும்- பிரபஞ்சத்தின் அடிப்படையான உண்மைகள்.

இது தவிர- வாழ்க்கைத் தத்துவம், செயல்விளைவுத்தத்துவம், -- இறைத்தத்துவம் போன்ற தத்துவங்களையும்- தமிழில்- வள்ளுவரைப் போல்- அழகாக எளிமையாக மானடத்திற்குத் தந்துள்ளார்.

## 1.வேதாத்திரியத்தின் சுத்தவெளித் தத்துவம்.

மகரிசியின் கூறும் அடிப்படையான தத்துவ உண்மைகளுள் - முதலாவது முதன்மையானது -சுத்தவெளித் தத்துவம் ஆகும்.

பிரபஞ்சத்தைத் தாண்டியும், பிரபஞ்சத்தைச் சூழ்ந்தும் உள்ள தூய வெளியே சுத்தவெளி எனப்படும்.

சுத்தவெளி இல்லாத இடமே இல்லை. சுத்தவெளி ஒன்றே சுயம். சுயத்திற்குப் பலபலப் பல பெயர்கள் உண்டு. கடவுள், தெய்வம், அல்லாஉற், பிதா என்றும் அழைக்கப்படும்.




சுத்தவெளியின் தன்னிறுக்கமே அதன் எழுச்சிக்கு முழுமுதற் காரணம். சுத்தவெளியில் எழும் அலைகளே காந்த அலைகள்.

சுத்தவெளியானது- அனைத்தூடுருவும்- பாய்மப் பொருளாகவும் விளங்குகின்றது. இறைநிலையாகிய- பாய்மப் பொருளே சுத்தவெளியாகும்.

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்ற நான்கும் - ஒன்றிணைந்த பெருவெளியே, சுத்தவெளியே மகரிசியின் கடவுளாகும்.

## 2.வேதாத்திரியத்தின் காந்த தத்துவம்.

"உயிர்த் துகள்கள் மிக மிக நுண்ணியது. அவை தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கக்கூடிய- சுழல் அலைகள்.

அப்படி சுழல்வதனால் ஏற்படும் விரிவலைகள்- சுழலாத இருப்பு நிலையில் உராய்ந்து- கரைந்து விடுகிறது.

அப்போது- தள்ளும் கொள்ளும் சக்தியான- இரட்டை ஆற்றலாக - காந்தம் என்ற பெயரில், ஜீவன்களில் ஜீவகாந்தம் என்றும், அதே இயக்கம் பிரபஞ்சத்தில் இருப்பதை வான் காந்தம் என்றும சொல்லப்படுகிறது.

"எந்தஒன்று அறிந்திடில் இறைவன் முதல் உயிர்வரை

எல்லவற்றையும் உணர்த்துமோ அதுவே காந்தமாம்.

முந்தையோர்கள் அகத்தவத்தால் முற்றுணர்ந்த போதிலும்

மொழிவதற்கு உவமையின்றி முட்டி மோதி நின்றனர்.

இந்தநாள் விண்ஞானமோ ஏற்றம் பெற்ற தாலதை

இயங்கிடும் மின்சாரம்மூலம் எல்லார்க்கும் உணர்த்தலாம்.

அந்தமாமாம் மெய்ஞ்ஞானத்தோடு அணுவின் ஞானம் இரண்டையும்

குறித்து உய்ய, பாலம்போன்ற ஆக்கஞானம் காந்தமே"(ஞாக.1661)

## 3. வேதாத்திரியத்தின் விண் தத்துவம்

புலன்களால் உணரப்பெறும் பிரபஞ்சத்திற்கும், புலன்களுக்கு எட்டாத சுத்தவெளிக்கும் இடையே உள்ளது- விண் தத்துவமெனும்- சுழல் அலையாகும். இதுவே பரமாணுவாகும்.

விண் என்பது- நிலையான ஒரு பொருள் அல்ல. அது- சுத்தவெளியின்- நுண்பகுதி இயக்கம் பெறுவதால் ஏற்படும்- சுழல் அலை ஆகும்.

எல்லா இயக்கங்களுக்கும் -அடிப்படையான இந்த விண் துகள்களின்- கணிக்கும் வகையிலே தான்- வேகம், பருமன், காலம், தூரம் என்னும் அளவைகள் தோன்றின என்றும்- சுத்த வெளியையயும்- விண்ணையும் தவிர- வேறு எவையும் பிரபஞ்ததில் இல்லை எனவும்- மகரிசி குறிப்பிடுகின்றார்.

## 4. வேதாத்திரியத்தின் விரிவலைத் தத்துவம்

விரிவலைத் தத்துவம்- நிழலைத் தத்துவம் என்றும்- கூறப்பெறும். விண்ணின் சுழலியக்கத்தால்- சுத்த வெளிக்கும் விணணுக்கும் இடையே- உராய்தல் ஏற்பட்டு, அதன் காரணமாகப்- பிறதொரு அலை- தொடர்ந்து வெளிவரும். இதுவே விரிவு அலையாகும்

## 5. வேதாத்திரியத்தின் வான்காந்தத் தத்துவம்.

பிரபஞ்சத்திலே உள்ள எல்லாப் பொருள்களின்- இடையிலேயும், ஒவ்வொரு பொருளிலுமுள்ள- விண் துகள்களுக்கு இடையிலேயும், ஒவ்வொரு விண் துகளின் மையத்திலேயும் உள்ள- சுத்த வெளியே வான்காந்தமாகும்.

இந்த வான்காந்தமானது- இடத்திற்கேற்பவும், காந்தக்களத்தின் திணிவு நிலைக்கேற்பவும்- அழுத்தமாகவும், ஒலியாகவும்,

ஒளியாகவும், சுவையாகவும், மணமாகவும்- மற்றும் இவற்றை உணரும் மனமாகவும்- தன்மாற்றம் பெறுகின்றது என்பது - மகரிசியின் வான்காந்தத் தத்துவமாகும்.

வான்காந்தத்தின் ஒரு பகுதிதான் ஜீவகாந்தம் என்பதும் மகரிசியின் கருத்தாகும்

சுத்தவெளி, விண், விரிவலை, விண்காந்தம் பற்றிய வேதாத்திரி மகரிசியின்- மிக நுட்பமான தத்துவச் சிந்தனைகள் -இந்திய தத்துவ ஞானத்திற்கும்- புதிய வரவாகப் புலப்படுகிறது.

## 6. **வேதாத்திரியத்தின்** பிரபஞ்சத் தன்மாற்றச் சரித்திரம்.




ஏதோஒரு ஆற்றல்- உலகைப் படைத்து- பாதுகாப்பும் , பராமரிப்பும் அளித்து வருகிறது என்ற கருத்தை விட, இறைநிலையே தன்மாற்றம் பெற்று, பிரபஞ்சத்தில் காணும் பொருட்களாகவும், அண்டங்களாகவும் கோடிக்கணக்கான உருவங்களாகவும் -இயங்கிக் கொண்டிருக்கின்றது என்ற பேருண்மையை உணர்த்துவதே- மகரிசியின் தன்மாற்றச் சரித்திரம் எனும் தத்துவம்.

"இறைநிலையின் தன்மாற்றம் - வேதாத்திரியம்

""இருப்புநிலை சுத்தவெளி இறைவன்என்று உணர்வோம்.

இறைவெளியின் நுண்பகுதி இயங்கும்சுழல் அலைவிண்.

இருப்புநிலை இறைவெளியொடு இயங்கும் விண்உரச

எழுந்தஅலை விரவலையாம். இதுநிழல் ஆம்அலையும்.

இருப்புநிலை விரிவுஅலை இரண்டிணையக் காந்தம்.

இக்காந்தத் தன்மாற்றம் இம்மூன்றாய்த் தோன்றி,

இருப்புநிலையில் அடங்கும். இதன்விளைவே எங்கும்

எல்லையிலாப் பேரண்டம், இயங்கு அனைத்துயிர்கள்." (ஞாக.1094)

## 7. **வேதாத்திரியத்தின்** கடவுள் தத்துவம்

"இறை" என்பது -தெய்வ நிலையைக் குறிக்கும் ஒரு சிறப்புச் சொல். "தெய்வம்" என்பது -அரூபமான பேராதராச் சக்தி".

மாபெரும் பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும்- மூலமானதும் புலன்களைக் கொண்டு -வேகம், காலம், பருமன், தூரம் என்ற- நான்கு அளவைகளாலும் -கணிக்க முடியாததும், அறிவு புலன்கள் மூலமாகத் தேடும்போது -இல்லையென்றும்- தனது ஆறாவது நிலையின் உயர்விலே ஆராயும்போது- உண்டு என்றும்- உணரக் கூடியதுமான- உண்மை நிலை எதுவோ- அதுவே தெய்வம்- என்று வழங்கப்படுகிறது.

இயற்கை என்பது- எல்லா ஆற்றல்களுக்கும் -அடிப்படையான மூல ஆற்றல்- ஒருங்கிணைப்புப் பேராற்றல்.

"கடவுள் என்று சொல்லிவிட்டான் கருவறிந்தோன்,

கருத்தறியான் ஊன்றிஇதைக் காணவில்லை!

கட-உள் என்ற ஆக்கினையின் குறிப்பைமாற்றி,

கண்டறிந்த நிலைக்கே அப்பெயரைக் கொண்டான்

கட-உள் என்ற இருசொல்லை ஒன்றாய்ககூட்டிக்

கடவுள் என்றே சொல்லிச்சொல்லி வழக்கமாச்சு!

கட-உள் என்றுமனிதன்ஒரு குறிப்புத் தந்தான்.

எடவுள் எங்கே? என்றுபலர் தேடுகின்றார்." (ஞா.க.1121)

## 8. வேதாத்திரியத்தின் வாழ்க்கைத் தத்துவம்.

வாழ்க்கைத் தத்துவம் மொத்தம் பன்னிரண்டு. அவை- தேவைகள் முன்று. காப்புகள் முன்று. அறநெறிகள் முன்று. அறிவுநிலைப் படிகள் முன்று.

- தேவைகள் முன்று அ).. பசி, தாகம், ஆகியவற்றால் எழும் துன்பங்கள். ஆ).. வெட்ப, தட்ப ஏற்றத் தாழ்வுகளால்- எழும் துன்பங்கள். இ). உடல் கழிவுப் பொருட்களின்- உந்து வேகத்தினால்- எழும் தேவைகள்.
- காப்புகள் முன்று. அ). வேற்றுயிர் பகை. ஆ). இயற்கைச் சீற்றத்திலிருந்து பாதுகாப்பு. இ.) தற்செயலான விபத்துக்களிலிருந்து காப்பு.
- அறநெறிகள் மூன்று. அ). ஒழுக்கம். ஆ). கடமை. இ). ஈகை.
- அறநிலைப் படிகள் மூன்று. அ) நம்பிக்கை ஆ) விளக்கம் இ) முழுமைப் பேறு.

## 9. வேதாத்திரியத்தின் கருமையம்.

உயிர்களின் உடலில்- உச்சி முதல் அடி வரை இடையேயுள்ள- நடுமைய புள்ளியே- கருமையத்தின் இயக்கக் களமாகும்.

ஒரு உயிரில் ஜீவகாந்த சுழற்சி விரைவால்- இயக்கக் களமாக இயங்கும்- நடுமைய அமைப்பே கருமையமாகும்.

மனிதர்களிடத்தில்- முதுகுத்தண்டில்- வால் போன்ற இறுதி பகுதிக்கு அருகிலும்- எருவாய் என்ற குதத்திற்கும்- கருவாய் என்கிற பால் குறிக்கு மத்தியிலேயும்- இடம் பெறுகிறது. மூலாதாரம் என்றும் மகரிசி கூறுவார்.

பதிவுகள் அடங்கிய- களங்கமுற்ற- அறிவின் எழுச்சியான- அலைகளின் தொகுப்பான- கருமையத்தை- ஆத்மா என்கிறார் மகரிசி.

## 10. வேதாத்திரியத்தில் உயிர்

**உயிர் விளக்கம் பற்றி மகரிசி சொல்லுகிறார்.**

"உடல், உயிர் இரண்டிற்கும் வித்தே மூலம்,

உட்பொருளே மெய்ப்பொருளாம். உண்மை தேர்வீர்!

உடல் என்ப தணுக்கள் பலசேர்ந்த கூட்டு.

உயிர் என்பதோ அணுவின் நுண்துகள் ஆம்.

உடல் ஊடே உயிர் சுற்றிச் சுழன்றியங்க.

உணர்ச்சியென்ற விளைவுண்டாம். அறிவு ஈதே!

உடலைவிட்டு உயிர் பிரிந்தால், அறிவங்கேது?

உடல வாழ்விறகுள் தான் இன்பம்துன்பம்." **(ஞாக.1147)**

**உயிரின் சிறப்பையும் வேதாத்திரிய தத்துவம் நமக்கு எளிமையாகச் சொல்லியிருக்கிறது.**

"உயிர் எனும் சக்தி உணர்ச்சியில் மனமாய்,

ஒடுங்கித் தன்மூலம் உணர்ந்திடப் பரமாம்!

உயிர்-பரம்-அறிவுஒன்றே பொருளால்

உணர்வு ஒழிய நிலைகளில் மாறுதல்" **(ஞாக.1145)**

## 11.வேதாத்திரியத்தில் மனம்

**சீவ காந்த அலையே மனமாகச் செயல்படுகிறது. மனம்பற்றி வேதாத்திரியம் எளிமையாக சொல்கிறது.**

""கருமூலம் எண்ணிறந்த பிறப்பால் வந்த

கருத்தாற்றல், அடிப்டையாய் அமையப் பெற்று,

உருவெடுத்த பின், உடலால் அறிவால் துய்த்த

உணர்ச்சி. பழக்கம், ஒழுக்கம், விளக்கம் மற்றும்

**வரும்தேவை, இருப்பு, சூழ்நிலை, தொழில் செய்**

**வாய்ப்பு. உடல்நலம், அறிவின் வளர்ச்சி கூடி,**

**ஒருவருக்கு அறிவியக்கம் அவ்வப் போது**

**உருவாகும் தொகுப்புச் சொல் மனமாம், காணீர்!" (ஞாக.1170**

## 12. வேதாத்திரியத்தில் சித்தாந்தம் வேதாந்தம்

**"இயற்கையின் ஆதிநிலை பிரம்மம், தெய்வம்**

**இயக்கநிலை அணுமுதலாய், அண்ட பிண்டம்,**

**இயற்கையின் உணர்வுநிலை அறிவு ஆகும்.**

**இம்மூன்றைப் பிரித்துப் பேசும் சித்தாந்தம்.**

**இயற்கையே அனைத்துமாய் உள்ளதென்று**

**எடுத்துரைக்கும வேதாந்தம், வெவ்வேறல்ல.**

**இயற்கைஎது? நான்யார்? என்றகத்தே நோக்க,**

**எண்ணியவன் ஒடுங்கும்போது இரண்டும் ஒன்றே! ((ஞாக.1136)**

## 13.வேதாத்திரியத்தின் மறுபிறவி

ஜீவனின் விந்து அல்லது நாதம் வழியா அதன் பாவச் செயல்களைச் சந்ததிகள் பெறும்படிச் செய்து, அவர்கள் மூலம் நேர் செய்ய முயற்சிப்பது போலவே, இறந்த பின் வான் மண்டலத்தில் மிதந்து கொண்டிருக்கும்- அதே ஜீவனின்- பாவச் செயல்களையும், அதன் மரபு வழி சந்ததிகளால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு- நேர் செய்யப்படுகின்றது.



மரபு வழி சந்ததிகளை- இணைத்து செயல்படும் போது- அது மரபு வழி கடமையாகவும் ஆகிறது.

மரபு வழிப்படியான- ஜீவன்களின் பதிவுகள்- அதன் மரபு வழி கருவில் இணைக்கப் பெறுவதால், மேற்படி- பாவப் பதிவுகளின் அலைவரிசைகளும்- துல்லியமாகச் செயல்படும் வாய்ப்புள்ளது.

மரபு வழியில்- மறுபிறவிகள் செயல்படுவதின் மூலம்தான் - இவ்வாறெல்லாம் செயல்படுத்த இயலும் என்பதாம்.

ஆக- ஜீவன் முக்தி அடையும் வரை, இறைநிலையை அடையும்வரை- ஜீவனின் "மறுபிறவி" தொடர்ந்த வண்ணமாகவே இருக்கும்.

## 14.வேதாத்திரியத்தின் சொர்க்கமும் நரகமும்.

சொர்க்கமும் நரகமும் எங்கோ இருக்கிற- தனித்தனி இடங்கள் அல்ல. பூமியில்- வாழ்வாங்கு வாழ்கிறபோது- வருகிற இன்பமே சொர்க்கம். அவ்வாறு வாழாதபோது- வருகிற துன்பமே நரகம்.

"உருவம் வரைக்கும் குறுகிநின்ற

உணர்ச்சி நிலையெ நர-அகமாம்.

அருவ மென்றும் பேரண்டம்

அறிந்த நிலையே சுவர்-அகமாம். பெருமையுள

விண் என்ற அணுவறிந்தோன்

விண்ணவனாம். ஆராய்ந்து

விண்கடந்து. வான் அறிந்த

விவேகியே வானவனாம்." (மா.ம.பக.21)

## 15.வேதாத்திரியத்தின் புண்ணியம் பாவம்.

எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில்- தனக்கோ- பிறர்க்கோ- தற்காலத்தோ- பிற்காலத்தோ- அறிவிற்கோ- உடலுக்கோ- துன்பம் தராது- விழிப்போட- துன்பங்கள் நீங்கும் வகையில்- செயல்படும் செயல்கள் யாவும்- புண்ணியம்.

ஒருவரது எண்ணம், சொல், செயல் இவைகளினால்- தனக்கேனும்- பிறருக்கேனும்- அன்றைக்கோ- பிற்காலத்திலோ- உடலுணர்ச்சிக்கோ- பகுத்தறிவுக்கோ- துன்பம் விளைவதாக இருந்தால்- அத்தகையச் செயல்கள்- பாவம் என்கிறார் மகரிசி.

"எண்ணம் சொல் செயல் என்ற மூன்றினாலும்

எவர்க்கெனினும் தனக்கெனினும் இன்றோ பின்னோ,

மண்ணுலகில் உணர்ச்சிக்கோ கற்ப னைக்கோ,

மாசு எனும் துன்பம் எழா வகையி னோடும்,

உண்மையிலே இன்பத்தை விளைத்துக்கொண்டே

உலக இயல்போடு ஒட்டிவாழும்செய்கை

புண்ணியமாம். இதற்கு முரணான எல்லாம்

புத்திம் மிக்கோர் பாபம்என விளங்கிக்கொள்வார்." (ஞாக.1297)

## 16.வேதாத்திரியத்தில் விதி மதி

**"இயற்கை சக்தியே விதி,**

**இதை அறிந்த அளவே மதி"** **(ஞாக.1264)**

விதி என்பது, இயற்கையின் இயக்க அமைப்புகளும் இயக்க நியதிகளும் ஆகும். கையோடு கையைத் தட்டினால் ஒலி உண்டாகும். இது விதி.

இதை வெல்ல வேண்டும் என்றால் கையைத் தட்டாது இருக்க வேண்டும். இயற்கையில் உள்ள எல்லா நிகழ்ச்சிகளும் விதிதான்.

அதைத் தெரிந்து அறிவால் அதற்கு முரண்படாது அனுபவிக்கும் பொழுது அதை “மதி” என்று சொல்கிறோம்.

**”வேகமாய் இருப்பதை விதி என்போம்,**

**சிவம் என்போம், இயற்கை என்போம்,**

**வேகத்தில் நுட்பமும் கூடியபின் அதை**

**விவேகம் என்போம், மதி என்போம்.**

**வேறு வேறு அல்ல.** **(மா.ம.பக.19)**

## 17.**வேதாத்திரியத்தின்** செயல்விளைவுத் தத்துவம்

செயலுக்குத் தக்க விளைவே இறைநீதி என்பது வேதாத்திரியம்.

”இறைநிலையில் எல்லாமே இருப்பு உள்ளதெனினும்,

எவரும் அதில் யாதொன்றும் எடுத்துக் கொள்ள முடியா.

மறைபொருளாய் இவையனைத்தும் அலைநிலையில் உளன.

மனிதன் செயல் எண்ணங்கள் தரம் தன்மைக்கொப்ப,

முறையாக உருவெடுத்து, முனைந்து உந்தி உந்தி,

முன்வந்து உரியவர்க்கு சேர்க்கும் இறைநீதி.

கறையுடைய பேராசை அளிப்பதுதான் என்ன?

களங்கம், உடல் மனத்துன்பம், காலவரை இல்லை.” (ஞாக.1809)

ஒவ்வொரு செயலுக்கும் -தக்க விளைவு உண்டு என்பது- இறைநீதியாகும். எண்ணம், சொல், செயல் என்ற மூன்றாலும் - மனிதன் செயல் புரிகிறான்.

அவற்றுக்கான விளைவு- நான்கு வகைகளில் வெளிப்படும். அவை - இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்பனவாகும்.

ஒருவர் தவறுசெய்யும் போது- அதற்கேற்ற விளைவைத் தருவதற்கான அறிவுதான்- கடவுளுக்கு உண்டே தவிர- அந்தத் தவற்றை- மன்னிக்கும் மனம் கடவுளுக்கு இல்லை.

"தப்புக் கணக்கிட்டுத் தான் ஒன்றை எதிர்பார்த்தால்

ஒப்புமோ இறயற்கை விதி? ஒழுங்கமைப்புக் கேற்றபடி

அப்போதைக்குப் அப்போது அளிக்கும் சரி விளைவை

எப்போதும் கவலையுற்று இடர்படுவார் இதை உணரார்." (ஞாக.1573)

## 18.**வேதாத்திரியத்தின் ஆத்திகம் நாத்திகம்**

இயற்கை அமைப்பை, அதன் ஆதி நிலையிலிருந்து- அறிவின் எல்லை வரை- அறிந்து கொள்வதே- தத்துவ விளக்கம் எனப்படும்.

தத்துவ விளக்கம் பெற்றவன், இயற்கையே எல்லாமாகவும், தானுமாகவும் இருக்கும் உண்மையை -உணர்ந்து கொள்கிறான்.

அவன் வேறு, இயற்கை வேறு என்றில்லாத- பேதமற்ற நிலையை உணர்ந்து கொண்டால்- அவனுக்கு அப்பாலும்- அவனுக்கு அன்னியமாகவும்- ஏதுமில்லை என்று தெளிவடைகிறான். இந்தத் தெளிவே நாத்திகம் எனப்படும்.

இந்த நிலையை- ஆறறிவு பெற்ற மனித இனத்தில்- வயது வந்தோர் அனைவரும் அறிந்தால் அல்லாது, மனித மன வாழ்வில்- அமைதியும் இன்பமும்- நிலைப்பதற்கில்லை.

எனவே. பல்வேறு அறிவு நிலைகளில்- வாழும் உலக மக்கள், இயற்கையின் பூரண நிலையை அறிய வேண்டிய அவசியத்தையும், வழிகளையும் -அறிந்தவன் சொல்லுகிறான்.

அறிந்து கொள்ள முடியாத- அறிவின் நிலையில் உள்ளவர்களுக்கு- ஆசையும், அச்சமும் ஊட்டும் -பல கற்பனைகளின் மூலம் - அந்நிலையை நாட வழி செய்கிறான்.

இவ்விதம்- நம்பிக்கை மீது -நல்வாழ்வு காண மக்கள் வகுக்கின்ற முறைகளே- பக்தி மார்க்கம் அல்லது ஆத்திகம் ஆகும்.

ஆகவே, பூரண விளக்கம் பெற்றவனே நாத்திகன். அவன் பரப்புவதே- ஆத்திகம் ஆகும்.

நாத்திகம் என்பது- உண்மையை உணர்ந்த நிலை. ஆத்திகம் என்பது- உண்மையை உணர -மனிதனை- நம்பிக்கை மூலம்- பக்குவப்படுத்தும் வழி.

நாத்திகம் பரப்பக்கூடியது அல்ல, உணரக்கூடியது. ஆத்தகமே பரப்பக்கூடியது.

காயே- தன் முடிவில் பழமாவது போல- ஆத்திகமே- நாத்திகமாக மாறிவிடும். அறிவின் மயக்கத்தாலும், வயிற்று பிழைப்பிற்காகவும் -பேசப்படுகின்ற ஆத்திகமும், நாத்திகமும் பயனற்றவை. அதோடல்லாமல் -பலவிதமான தீமைகளையும் விளைவிப்பனவாகும்.

## 19.வேதாத்திரியத்தின் வேதாந்த தத்துவம்

இந்திய தத்துவங்களுள் ஆதிசங்கரருடைய அத்வைதம், இராமானுசருடைய விசிட்டாத்வைதம், மத்துவருடைய துவைதம் என்ற மூன்றும் வேதாந்த தத்துவங்கள் எனப்படும்.

சங்கரரின் அத்வைதக் கோட்பாடினைக்- கற்கண்டையும்- கரும்பு ரசத்தையும்- ஒன்றாகக் காட்டுவதன் மூலமும்- புலப்படுத்தும் வேதாத்திரியார், அவை இரண்டையும்- வேறு வேறாகக் காண்பதன் மூலம்- மத்துவரின் துவைத வேதாந்தத்தை விளக்குகின்றார்.

"கற்கண்டு என்ற ஒரு வார்த்தை சொன்னால்

கரும்பு ரசப்பக்குவத்தின் சரித்திரமாகும்

கற்கண்டைக் கரும்பு ரசம் என்றால் அஃது

கருத்துக்கு அத்துவித தத்துவம் போல்

கற்கண்டு கரும்புரசம் வேறு வேறாய்க்

காட்டுவது துவித நிலை விளக்கம் ஆகும்

கற்கண்டு கரும்பு ரசம் இரண்டும் போலாம்

கடவுளும் மற்றனைத்துருவும் கருத்துணர்ந்தால்"(ஞா.க.1392)

மேலும், மகரிசி அத்வைத வேதாந்த தத்துவச் சிந்தனையைப் புலப்படுத்துவாற்குக்- கடலினையும்- அதன் அலையினையும்- உதாரணம் காட்டி விளக்குவது- அவர் அத்வைத தத்துவ ஞானியாகவும் விளங்குவதை- வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

மெய்பொருளுக்கும் பிரபஞ்சத்திற்கும் உள்ள- அத்வை வேதாந்தத் தத்துவ உறவினையே- மகரிசி,

"ஆழ்கடல் போல் மெய்ப்பொருளாம்

அலைகள் போல் உருவனைத்தும்" (மா.ம.பக்.11)

என்று குறிப்பிடுகிறார்.

அத்வைத வேதாந்தத் தத்துவத்தினைப் புலப்படுத்தும்- தத்துவமஸி, அகம்பிரமாஸ்மி, அயம் ஆத்மாபிரமம், பிரக்ஞானம், பிரமம் போன்ற உபநிடத தத்துவச் சிந்தனைகள்- வேதாத்திரியாரின் தத்துவச் சிந்தனைகளில்- பல இடங்களில் எதிரொலிப்பதைக் கண்டு இன்புறலாம்.

## 20.வேதாத்திரியத்தின் சைவேடி தத்துவம்.

இந்திய தத்துவ ஞானங்களுள் "அணு" பற்றிய விளக்கத்தை- விரிவாகக் கூறும் புராதன தத்துவமாக- வைசேடிகம் விளங்குகிறது.

வைசேடிக தத்துவ ஞானியான- கணாத முனிவர்- அனைத்துப் பொருட்களும்- உலகமும்- அணுக்களால் ஆனதென்பர்.

இத்தகைய- வைசேடிக தத்துவக் கருத்தினை- வேதாத்திரி மகரிசியும்.

"அணுவிலோ பிரபஞ்சம்

அடக்கம் பெற்றிருப்பதனை

அறிவை அறிந்தோர் அறிவர்

அவர் அணுவாய் நின்றதனால்" (மா.ம.பக.39)

என்றும்-------

"அணுவில் அண்ட பிண்டம் அனைத்தும் உண்டு" (ஞா.க.)

என்றும் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக- வேதாத்திரியத்திய தத்துவச் சிந்தனைகளில்- வைசேடிக தத்துவம் கூறும் அணுக்கோட்பாடு பற்றிய கருத்துக்கள்- விரிவாக எதிரொலிப்பதைக் காணலாம்.

## 21.வேதாத்திரியத்தின் சைவ சித்தாந்த தத்துவம் தத்துவம்.

சைவ சித்தாந்தம்- பதி, பசு, பாசம் என்ற- முப்பொருள் உண்மை பற்றிப் பேசம்- தத்துவமாகும்.

இத் தத்துவத்தின் செல்வாக்கு- வேதாத்திரியாரின் சிந்தனைகளில் காணலாம்.

மனம் ஒருமுகப்பட்டு- பற்றற்ற நிலை ஏற்படும்- பதி, பசு, பாசம் என்ற முப்பொருளும் விளக்கம் பெற்று -வாழ்வு வளம் பெறும் என்பதை மகரிசி.

"நிலையாது சுழலுமனம் உள்ளொடுங்கி

பற்றற்ற நிலைவரையில் பழக வேண்டும்

பதி பசு பாசம் நிலைகள் விளக்கமாகும்

நற்றவத்தால் வாழ்வு வளம் பெருகத் துய்த்து

நாட்டுக்கும் தொண்டாற்றி நலம் விளைவிப்போம்" (ஞா.க.)

என்று குறிப்பிடுகின்றார் மகரிசி.

## 22.வேதாத்திரியத்தின் யோகத் தத்துவம்.

இந்திய தத்துவச் சிந்தனைகளின் சிகரம்- யோக தத்துவமாக விளங்குகிறது.

யோகசூத்திரம் மற்றும் தந்திர சாஸ்திரங்கள்- இத்தத்துவம் பற்றி- மிகவும் விளக்கமாகக் குறிப்பிடுகின்றன.

வேதாத்திரியாரின்- அடிப்படையான வாழ்வியல் தத்துவமாக - குண்டலினி யோக தத்துவம் விளங்குகின்றது.

எவரும் -குண்டலின் யோகத்தை- மனவளக்கலையாகப் பயின்று - வாழ்வில் முன்னேறலாம் என்பதை பாடமாக்கி- பல்கலைக் கழகம் வரை- பதிவு செய்துள்ளார் மகரிசி.

குண்டலினி யோக தத்துவத்தை- வாழ்வியல் தத்துவமாக வளர்ந்தெடுத்துவரும் யோகியாக- வேதாத்திரியார் விளங்குகின்றார்.

## 23.வேதாத்திரியத்தின் அறிவுத் தத்துவம்.

வேதாத்திரியத்தின் தத்துவச் சிந்தகைள் அனைத்திலும்- அறிவுத் தத்துவம்- அடிப்படையாகக் இருப்பதைக் காணலாம்

மனிதனுக்கு- ஆறாவது அறிவு உண்டு என்பதும், இறைவெளியையும், அதன் உள்ளாற்றலான அறிவையும். அறிவின் புற இயக்கமான மனத்தையும்- அறியத்தக்க அறிவுதான்- ஆறாவது அறிவு என்பது -வேதாத்திரியாரின் கருத்தாகும்.

"அறிவின் தத்துவமதை ஆராய்ந்தேன். காந்த

அலை இயக்கமே அன்றி வேறு இல்லை!

சிறிதுபெரிதாய் அமைந்த குழாய்கள் ஊடே

சென்று சுழன்றே இயங்கும் இரத்தவேகம்,


எறிகின்ற தொடர்காந்தம் உடலில் மீறி,

எழும் சப்தம், சுவை, மணம், ஊறுஒர்ச்சி யாவும்

பொறிபுலன்கள் கூடுதற்கு ஏற்றவாறு

புத்தி நுட்பமாய் இருக்கும் விதமும் கண்டேன்” (ஞாக.1186)

அறிவு என்பது -ஒரு இயக்க ஒழுங்கு என்றும், எங்கும் நிறைந்திருக்கின்ற- ஒரு மகோன்னதமான சக்தி வேகத்தை ஒழுங்குபடுத்தி- முறையாக இயங்கச் செய்யும்- ஓர் அற்பதமான ஆற்றல்தான் அறிவு என்றும் -மகரிசி குறிப்பிடுகின்றார்.



மகரிசியின் அறிவுத் தத்துவத்தின் குறியீடாக பறைசாற்றிக் கொண்டிருப்பதே- பொள்ளாச்சி அழியாறு பகுதியில் ”ஓம்” என்னும் வடிவில்- அவரால் வடிவமைக்கப் பட்டிருக்கும்- அறிவுத் திருக்கோயில் ஆகும்.

பாமர மக்களின் தத்துவஞானி வேதாத்திரி மகரிசியின் தத்துவச் சிந்தனைகள்- தனித்துவமான சிறப்புகள் உடையதாக விளங்குகிறது.

மகரிசியின் சில சிந்தனைகள் இந்திய தத்துவ ஞானத்திற்குப் புதிய வரவாகவும், புத்தொளி ஊட்டுபனவாகவும் விளங்குகின்றன. வேதாத்திரி மகரசியின் தத்துவச் சிந்தனைகள் தனித்துவமான சிறப்புகள் உடையதாக விளங்குகிறது.



இந்திய தத்துவவரலாற்றில் - வேதாத்திரி மகரிசி ஒரு மைல் கல். இந்த நூற்றாண்டுக்கு மானுடத்திற்குத் தேவையான அவசியமான- அறிவில் பூர்வமான -தத்துவங்கைளை

பதிவு செய்துள்ளார்.

வேதாத்திரி மகரசி எழுதிய நூல்கள் யாவும்- உலகச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கியதாகவும், மனிதகுலம் உணர்வதற்கான உயர்த் தத்துவங்களையும்- உன்னத இலட்சியங்களையும் உணர்த்துவனவாகும் உள்ளன.

வேதாத்திரியம் எனக் கூறத்தக்க- மகரிசியின் சிந்தனைகளை- மேன்மேலும் ஆராய்ந்து, அவற்றை வளர்த்தெடுக்க வேண்டியது - தத்துவ அறிஞர்களின் கடமையாகவும்- மனவளக்கலை பயிலும் அன்பர்களது- கடமையாகவும் அமைகின்றது.

துணைநின்ற நூல்கள்.


1. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிசி.
2. அன்பொளி மாதஇதழ்கள், வேதாத்திரி மகரிசி.
3. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000, அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
4. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிசி, வேதாத்திரி மகரிசி.
5. மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து, வேதாத்திரி மகரிசி


## மன்னார்குடி பானுகுமார் படைப்புலகம்

www.banukumar.in

## ஆன்மீகம்

1. **தியானம் பழக 100 தியான சிந்தனைகள்**
2. **அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்**
3. **கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்**
4. **குதம்பைச் சித்தரின் ஞானப்பட்டறை** (அச்சில்)

## வாழ்க்கை வரலாறு

1. **நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**

2. **புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
3. **இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
4. **குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார் வரலாறு)**
5. **வேதாத்திரி மகரிசி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. **தன்னம்பிக்கை மலர்கள்.**
2. **டென்சனை வெல்வது எப்படி?**
3. **காலமே உன் உயிர்**
4. **வேதாத்திரி மகரிசியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.**
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரசி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரசியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரசியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரசியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞானஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரசியும்)
10. சித்தர்களும் வேதாத்திரி மகரிசியும்.
11. **மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்**
12. **சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிசியும்.**
13. **ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்**
14. **சுகவாரியும் பேரின்ப ஊற்றும்**
15. **பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிசியும்**

16. **விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரயமும்**

# வேதாத்திரி மகரிசி வேதாத்திரி மகரிசி

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிசி
2. **வேதாத்திரி மகரிசி பற்றி 100 அறிஞர்கள்.**
3. "வாழ்க வளமுடன்!" என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
4. ஜென்னும் வேதாத்திரியமும் .
5. **வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)**
6. **வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 11)**
7. **வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 111)**
8. **தினசரி தியானம்.**
9. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
10. வரலாறு போற்றும் குரு சீடர்கள்

11. **கன்பூசியசும் வேதாத்திரி மகரிசியும்**
12. **ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்**.
13. **வேதாத்திரி மகரிசி காட்டும் வறுமை**
14. **வேதாத்திரியம் கற்போம்**
15. **மனைவிக்கு மரியாதை**
16. **பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிசி**
17. **பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிசி**
18. **சாக்ரட்டீசும் வேதாத்திரியும்**
19. **பிளேட்டோவும் வேதாத்திரியும்**
20. **அரிஸ்டாட்டிலும் வேதாத்திரியும்**
21. **சர் ஐசக் நியூட்டனும் வேதாத்திரியும்**
22. **வால்டேரும் வேதாத்திரியும்**
23. **எமர்சனும் வேதாத்திரியும்**.
24. **சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரசியும்.**
25. **வேதாத்திரியத்தில் காரல் மார்க்சும்**

26. **இங்கர்சாலும் வேதாத்திரி மகரசியும்.**
27. **சிகமண்ட் பிராய்டும் வேதாத்திரி மகரிசியும்.**
28. **ஜேம்ஸ்ஆலனும் வேதாத்திரி மகரிசியும்.**
29. **வேதாத்திரி மகரிசியின் தத்துவ தரிசனங்கள்**
30. **ஜென் புத்தரும் வேதாத்திரி மகரிசியும்**

## தாயுமானவர் தாயுமானவர் தாயுமானவர்

1. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
2. சேரவாரும் ஜெகத்தீரே
3. தாயுமானவரின் ஆனந்தக் களிப்பு
4. தாயுமானவரின் இலக்கிய நயம்
5. தாயுமானவரின் மெய்ப்பொருள்
6. தாயுமானவரின் சமயநெறி
7. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
8. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
9. தாயுமானவரும் மகான்களும்
10. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
11. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
12. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
13. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
14. தாயுமானவரின் ஞானதாகம்
15. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
16. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
17. தாயுமானவரின் உயிர் விளக்கம்
18. GARLAND OF PARAAPARAM
19. தாயுமானவர் போற்றும் அறம்
20. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
21. ஏன் அவதரித்தார்கள்?
22. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்

23. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
24. தாயுமானவர் பாடல்களில் மனம்
25. தாயுமானவர் வழிபாடு ஏன்?
26. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
27. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
28. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
29. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
30. **பட்டினத்தாரும்** தாயுமானவரும்
31. **ஜென்னும் தாயுமானவரும்**
32. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
33. தாயுமானவருடன் வாழ்வோம்
34. தாயுமானவரின் உவமைகள் 100
35. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
36. ஜென் புத்தரும் தாயுமானவரும்

### பயணங்கள் பயணங்கள்

1. **ஞாபகம் வருதே ஞாபகம் வருதே**
2. **அமெரிக்க மண்ணில் ஆறுமாதங்கள்.**
3. **சிம்லாவில் ஐந்து நாட்கள்**

## வரலாறு வரலாறு

1. **மன்னார்குடி வரலாறு**
2. **மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000**

## சிறுகதைகள் சிறுகதைகள்

1. **செயலே விளைவு**
2. **தவம்**

## ஆய்வு நூல்கள். சிறுகதைகள்

1. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்.